★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 28உ புதன் (11—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 29உ வியாழன் (12—7—56) [இதழ் 23

## பெண்ணைக் காப்பாற்றிய குரங்கு!

அலகாபாத் ஜூலை, 10—

முரட்டுக் குணம் படைத்த குரங்கு ஒன்று, இங்குள்ளோருக்குப் பெரும் தொல்லையாகவே இருந்தது. ஆனால், அது ஒரு பாம்பிடமிருந்து பெண் ஒருவரைக் காப்பாற்றியதாகத் தெரியவருகிறது.

வழக்கமாக கங்கை நதியில் குளிக்கச் செல்லும் அந்தப் பெண் இன்று சென்றபோது திடீரெனப் பாம்பு ஒன்று தன்னை நோக்கிப் பாய்ந்து வருவதைக் கண்டார்.

திடுக்கிட்டு அவர் எழுப்பியக் கூச்சல் கேட்டு அந்தக் குரங்கு மர உச்சி ஒன்றிலிருந்து ஓடோடியும் வந்தது.

சிறிதுநேரம் பாம்புடன் சண்டை போட்டு பாம்பின் படத்தை மிதித்து அழுத்திக் கொன்றதை கூடிவிட்ட பலரும் கண்டனராம்.

# சமதர்மமும் சாதிமுறைக் கேடும்

## மந்திரி செகசீவன்ராம் தரும் விளக்கம்

## 'சாதிமுறையும் சமதர்மமும் ஒன்றுபட்டு வாழாது'

### 'சில மந்திரி பதவிகள் மட்டுமே தாழ்த்தப்பட்டோர் பிரச்னைக்குப் பரிகாரமல்ல'

'இப்போது சோஷலிசம் பேசுவது ஏழ்மையைப் பங்கிடுவதானாலும் அதில் தீங்கேதுமில்லை'

பாடிண்டா (பெப்சு), ஜூலை 9—

"சாதி முறையும், சமதர்மமும் ஒருங்கே ஒன்றுபட்டு வாழ முடியாது.

"சாதி முறையை ஒழிக்காது இந்தியாவில் சமதர்மத்தை நிலைநாட்ட முடியும் என நினைக்கிறவர்கள், தங்களையும் நாட்டையும் ஏமாற்றுகிறவர்களாவர்."

இங்கு நடைபெற்ற அரிசன அரசியல் மாநாட்டைத் திறந்து வைத்தபோது, மத்திய மந்திரி செகசீவன்ராம் மேற்கண்டவாறு எடுத்துரைத்துவிட்டு, மேலும் குறிப்பிட்டதாவது:—

"அரிசனங்களில் சிலர் அரசாங்க பதவி பெறுவதும் அமைச்சர்களாக இடம் பெறுவதும், அரிசன சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடாது; ஆனால், பெரிய அளவில் அது மனமாற்றத்தை உருவாக்கும்.

"இந்த நிலையில், இருக்கும் செல்வத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதனால், வறுமையைத்தான் பகிர்ந்தளிப்பதாக முடியும் எனச் சிலர் கூறுகின்றனர்; அக்கூற்று உண்மையாக இருக்குமானாலும், அவ்வாறு வறுமையைப் பகிர்ந்தளிப்பதில் தீமை எதுவும் கிடையாது."

இவ்வாறு இடித்துரைத்துவிட்டு மேலும் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"சொத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இன்றைய சமுதாயத்தை மாற்றியமைக்கக் காங்கிரஸ் முயற்சித்து வருகிறது. என்ன இருந்தாலும், அரசியல் விடுதலையைக் காட்டிலும் பொருளாதாரப் புனரமைப்புக்கு அதிகமான தியாகம் தேவைப்படுகிறது.

"ஒவ்வொருவரும் வளர்ச்சி பெற்று உயர்நிலை எய்துவதற்கான ஒத்த வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதுதான் சமதர்மத்தின் உள்ளடக்கமாகும்."

மேற்படி மாநாட்டில் கலந்துகொண்ட மத்திய மந்திரியை ஊர் மக்கள் மிக்க உற்சாகத்துடன் வரவேற்றனர்.

## மத்திய சர்க்காரின் சுங்க வரி விதிப்பு

சென்னை சர்க்கார் ஒப்புதல்

சென்னை, ஜூலை 10—

மாநில சர்க்கார் விதிக்கும் விற்பனை வரிக்குப் பதில், துணி, சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது கூடுதலான விகிதத்தில் மத்திய சர்க்கார் சுங்க ('எக்சைஸ்') வரி விதிப்பதற்கு சென்னை சர்க்கார் சம்மதம் தெரிவித்துவிட்டதாம்.

## பீகார் மந்திரி சபை மீது காங்கிரசார் குற்றச்சாட்டு

ராஞ்சி, ஜூலை 10—

பொதுவாக பீகார் மந்திரி சபை மீதும், குறிப்பாகப் போக்குவரத்து தகவல் அறிவிப்பு—தொழில் இலாகா மந்திரியான மகேஷ் பிரசாத் சின்ஹா என்பவர் மீதும், பீகார் சட்டசபைக் காங்கிரசார் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று விசாரணையின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகக் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமந் நாராயணன் தெரிவித்திருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன் பீகார் சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர் 72 பேர் கையெழுத்திட்டு, மந்திரி சபை மீதும் போக்குவரத்து இலாகா மந்திரி மீதும் பல குற்றச்சாட்டுக்களடங்கிய மனு ஒன்றை மேலிடத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர்; அதில் கூறப்பட்டக் குற்றங்களின் வகைகள் பத்திரிகைகளுக்குத் தரப்படவில்லை.

நாராயணன் மேலும் கூறியதாவது:—

"பீகார் மாநிலத்தில் சில மாவட்டக் கழகங்களின் நிர்வாகம் மிக அதிருப்திகரமானவையாயுள்ளன; சில கழகங்களில் பெருந் தவறுகள் நிகழ்ந்துள்ளன; இவற்றிற்குக் காரணமானவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டுமென, இவை குறித்து விசாரித்துக் கொண்டிருக்கும் முதன் மந்திரிக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

"காங்கிரசார் குற்றச்சாட்டுக்களை ஆதாரமின்றி எழுப்பக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்."

## விலகுகிறீரா? நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவா?

### அனுமந்தையாவை மிரட்டுகிறார் பிரதேச காங்கிரஸ் தலைவர்

புதுடில்லி, ஜூலை 11—

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையாவை சந்தித்துப் பேசிய பின், அவர்மீதுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரச்சினையில், காங்கிரஸ் தலைவர் தேபர் ஒரு முடிவுக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

'ஜனநாயக முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தாமதிக்கக் கூடாதென்றும், அனுமந்தையா விலகவேண்டும் அல்லது 'ஓட்' எடுத்துப்பார்க்க வேண்டும்' என்று, மைசூர் காங்கிரஸ் தலைவர் சென்னையா, காங்கிரஸ் மேலிடத்தவரிடம் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

## தூக்குத் தண்டனை ஒழிப்பு மசோதா

இங்கிலாந்து பிரபுக்கள் சபை நிராகரிக்கிறது

லண்டன், ஜூலை 10—

இங்கிலாந்து மக்கள் சபை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிய தூக்கு தண்டனை ஒழிப்பு மசோதாவை, பிரபுக்கள் சபை நிராகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மக்கள் சபை, இந்த மசோதா சட்டமாக வேண்டுமென வற்புறுத்தினால், இன்னும் ஒரு ஆண்டுக் காலதாமதமாகும்.

பிரபுக்கள் சபைக்கு ஒரு மசோதாவை ஓராண்டிற்குத் தாமதப்படுத்த மட்டுமே அதிகாரம் உண்டு; மசோதாவையே ஒழித்துவிட அதிகாரம் இல்லை.

## சுதந்திரத் தமிழ் நாடு கூடாதாம்!

### தென்னாட்டின் மீது வடநாட்டு ஆதிக்கம் இல்லையாம்

புதுவை, ஜூலை 9—

தென்னாட்டை வடநாடு ஆதிக்கம் செலுத்துவது என்பது இல்லையாம்! அதனால், சுதந்திரத் தமிழ் நாடு வேண்டுமென்பது கூடாதாம்.

இவ்வாறு கருத்தறிவித்திருக்கிறார் ஆச்சாரியா வினோபா பாவே!

"பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்,"

என்று கூறி, சுதந்திரத் தமிழ் நாடு வேண்டுமென்பதற்கான கிளர்ச்சியை அவர் கண்டித்தாராம்.

பிரெஞ்சு மொழி ஒரு அன்னிய மொழி என்பதற்காகவே அதனைப் புதுவையிலிருந்து விரட்டிவிடக்கூடாது. உலகத்திற்குப் பலன் தரும் பலவற்றைப் பிரான்ஸ் வழங்கியிருக்கிறது. அதே காரணத்திற்காகத்தான் ஆங்கிலத்தையும் புறக்கணிக்கக்கூடாதென்கிறேன் என்று கூறியிருக்கிறார் பாவே!

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ உதவி

### இரண்டு மாதத்தில் உருவம் பெறும்

மூன்று கோடி டாலர் செலவில், பாகிஸ்தானில் இராணுவத் தளங்கள் நிர்மாணிக்கப்படப் போவதாக அமெரிக்கத் தூதுவராலயம் அறிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் மூன்று இராணுவப் பிரிவுகளுக்கும், இப்போதுள்ள வசதிகளை நவீன மயமாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்; இதற்கான வேலை இரண்டு மாதத்திற்குள் ஆரம்பமாகிவிடக்கூடும்.

இந்தத் திட்டம் முடிவடைவதற்கு இரண்டாண்டு காலமாகுமென்றும், அதில் 12,000 பாகிஸ்தான் மக்களுக்குப் பணி கிடைக்கும் வாய்ப்பு கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அடிமை வலையில் வீழ அழைப்பு!

### மரண தண்டனை

இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, ஜூலை 11—

இந்தியாவில் மரண தண்டனையை ரத்துச் செய்வதற்காக, இப்போது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லையென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக மாநில சர்க்கார்களின் கருத்துக்கள் கோரப்பட்டன. இப்போதுள்ள நிலைமையில் மரண தண்டனையை ரத்துச் செய்யக்கூடாதென்றே மாநில சர்க்கார்கள் கருத்தறிவித்தனவாம்.

### ஐந்தாம் வகுப்பிலிருந்தே இந்தியை போதிக்க வேண்டுமாம்

பிரச்சார சம்மேளனத்தின் துடுக்குத்தனம்

ஐதராபாத், ஜூலை 9—

இடைநிலைப் பள்ளிகளில் தேர்ச்சிக்குரிய மொழியாக இந்தி ஏற்படுத்தப்படுவதற்கான சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வற்புறுத்தியும், தென்னாட்டு மாநிலங்கள், தங்கள் தங்கள் மாநிலப் பள்ளிகளில் 5-ம் வகுப்பிலிருந்தே இந்தி மொழி பாடத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அவ்வாறு செய்வதானால், 5-ம் வகுப்பிலிருந்தே இந்தி மொழி பயிலும் மாணவர்கள் பள்ளி இறுதிக் கட்டத்தை அடையும்போது இந்தி மொழி பற்றிய முழு அறிவையும் பெற ஏதுவாகும் என்று காரணம் காட்டியும் இந்திப் பிரச்சார சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—7—'56 புதன்

# எல்லைத் தகராறு

ஆந்திர மக்களின் நெடுநாளைய மொழி வழி மாநிலக் கோரிக்கை, கடந்த 1953-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஈடேற்றப்பட்டபோது, சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ் வழங்கும் பகுதிகள் சிலவும் அத்துடன் சேர்க்கப்பட்டுவிட்டன. இந்தத் தமிழ் வழங்கும் பகுதிகள், ஆந்திர மக்கள் மெருகேற்றிய மொழி வழி மாநிலக் கோட்பாட்டின் படி, தமிழ் நாட்டுடன் இணையவேண்டும் என்பதில், ஆந்திர மக்களுக்கே கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

தெலுங்கு மொழி பேசும் ஆந்திரர், தமிழ் வழங்கும் சென்னையுடன் பிணைக்கப்பட்டிருப்பதால், அவர்களின் முன்னேற்றம் தடைப்படுகிறது—பெருமை குலைகிறது என்று கருதியதில் எத்தனை நியாயம் உண்டோ, அதே அளவு நியாயம், தெலுங்கர்கள் வாழும் ஆந்திரத்தில் இணைக்கப்பட்டிருப்பதால், சித்தூர் வட்டத் தமிழ்ப் பகுதி மக்களின் கோரிக்கையிலும் இருக்கிறது.

சித்தூர் தமிழ்ப் பகுதிகள், தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்படாமல், ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டதற்குப் பொறுப்பாளிகள் ஆந்திரர்கள் அல்லர்; மாறாக, மாநில அமைப்பை உருவாக்குவதற்குரிய அதிகாரம் படைத்த டில்லியார்தான் என்பதையும் எவரும் மறுத்துவிட முடியாது.

ஆந்திர மாநிலத்தின் எல்லைகள் வகுக்கப்பட்டபோது, டில்லி, எந்த ஒரு நியாயமான கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆந்திரர்களின் நிர்ப்பந்தத்திலிருந்து தப்புவதற்கு முடியாத நிலையில், வேண்டா வெறுப்பாக ஆந்திர மாநில அமைப்பிற்கு இணங்கியவர்கள்தானே டில்லிப் பெரிய மனிதர்கள்?

நமது இந்த வாதத்திற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. ஆந்திர மாநில அமைப்பை உருவாக்குவதற்காக முதன் முதலில் நியமிக்கப்பட்ட நீதிபதி ஒருவர், பெல்லாரியை ஆந்திரத்துடன் சேர்த்து இணைத்து மாநிலப் படம் வரைந்து தந்தார். கோபங்கொண்ட பெல்லாரி மக்கள், டில்லியை, அமைதியான வழிகள் மூலம் தங்கள் விருப்பத்திற்கு இணங்கச் செய்ய முடியாததை உணர்ந்த பின்னர், பன்முறைச் செயல்களில் ஈடுபட்டுத் தங்கள் கோரிக்கையின் மீது நேரு பெருமானின் பார்வை விழச் செய்தனர். மீண்டும் ஓர் நீதிபதி நியமிக்கப்பட்டு, பெல்லாரி நீங்கிய ஆந்திர மாநில நிலப்படம் புதியதாக வரையப்பட்டது.

இப்படி ஆந்திர மாநில அமைப்பு, தெலுங்கு மொழி வழங்கும் பகுதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாக இருக்க வேண்டும் என்ற பொதுவான கொள்கையோடு, அவசர அவசரமாக உருவாக்கப்பட்டதுதான். எனவே, அந்த மாநிலத்தில் இணைக்கப்பட்டுவிட்டத் தமிழ்ப் பகுதிகள், என்றென்றைக்கும் அந்த மாநிலத்திலேயே இருக்க வேண்டும் என்று எவரும் கூறிட முடியாது.

சித்தூர் தமிழர்கள் தங்கள் கோரிக்கையை அமைதியான வழிகள் மூலம் எடுத்துரைத்தத் தவறினாலோ என்னவோ, அவர்களுக்கு நியாயம் வழங்க ஒரு நீதிபதி நியமிக்கப்படாமல் போய்விட்டார். டில்லி செய்த பெரும்பிழை, இன்னும், ஆந்திரா—சென்னை மாநிலங்களுக்கிடையே எல்லைப் பிரச்சினை என்ற பெயரில் ஒரு சிக்கல் நீடித்துக் கொண்டிருப்பதற்கு வழி செய்துவிட்டது.

இந்தச் சிக்கலை இருமாநில சர்க்காரும் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ளுவது என்ற வழி, இப்போது தூர்ந்து போய்விட்டது. இதற்குச் சென்னையையோ ஆந்திரத்தையோ பொறுப்பாக்கி ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொள்வது, இரு சாராருக்கும் நல்லதல்ல. இந்த நிலைக்குக் காரணமான டில்லி, செய்வன திருந்தச் செய்திருந்தால், 'ஏற்கவே மாட்டேன்' என்ற மமதை தூளாக்கப்பட்டு, 'ஏற்கத்தான் வேண்டும்' என்ற நிலை பிறந்து, ஏற்றுக்கொண்டு, மொழிவழி அடிப்படையில் ஆந்திர மாநிலத்தை உருவாக்கியபோது நேற்று வரை ஒன்றாக வாழ்ந்த ஆந்திரரும் தமிழரும், எதிர்காலத்திலும் மனக்கசப்பின்றி சுமுகமான உறவுடன் வாழவேண்டுமே என்ற நல்லெண்ணம் தரும் கவலையோடு, எல்லைகளைத் தகராறுக்கு இடமின்றி நிர்ணயித்திருந்தால், பிரச்சினையே கிளம்பியிருக்காதல்லவா?

இப்போதும் டில்லிக்கு, செய்தத் தவறைத் திருத்திக் கொள்ள காலங்கடந்துவிடவில்லை. சென்னை சர்க்கார் கோருகிறபடி, ஒரு எல்லைக் குழுவை நியமிப்பதின் மூலமோ, அல்லது தாயகத் தமிழரில் பலர் விரும்புவதைப்போல தகராறுக்குரிய பிரதேசங்களில் வாக்கெடுப்பு நடத்துவதின் மூலமோ தகராறினை அமைதியாகத் தீர்த்து வைக்கலாம். செய்வார்களா?

## சர்க்கரை ஆலைகளுக்கு பிரிட்டிஷ் இயந்திரங்கள்

தென்னாட்டில அமைக்கப்படும் சர்க்கரை ஆலைக்குத் தேவையான இயந்திர சாதனங்களை பெய்ஸ்லி (ஸ்காட்லாந்து)யிலுள்ள ஓர் தொழிற்சாலையிலிருந்து கொள்முதல செய்ய நிச்சயித்திருக்கிறார்களாம். இவை தினசரி 1,000 டன்கள் கரும்பு பிழியக்கூடிய ஆலைச் சாதனங்கள் என்றும், விலை மதிப்பு சுமார் 5,00,000 பவுன்கள் என்றும், இதே தொழிற்சாலை, சமீபத்தில் பஞ்சாபில், இரண்டு ஆலைகளை வயப்படுத்துக் கொடுத்தது என்றும் தெரியவருகிறது.

1840-ம் ஆண்டு முதல சர்க்கரை ஆலை இயந்திர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்த பெய்ஸ்லி தொழிற்சாலை, இந்தியா, பிலிப்பைனஸ், தென் அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள ஆலைகளுக்கு இயந்திர சாதனங்களை அனுப்பி பிரபலமடைந்திருப்பதாகும் என்று கூறப்படுகிறது.

# தென்னாட்டவரை வடவர் அவமதிக்கும் விதம்!

## கிருஷ்ணமாச்சாரியின் வியாக்கியானம்

'மதராசி' என்ற சொல்லுக்கு வடநாட்டில் பல வகையான பொருள்கள் கூறப்படுகின்றனவாம்! அச்சொல், சிற்சில நல்ல செயல்களுக்கும், சிற்சில தீயனவற்றிற்கும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படுகிறதாம்.

'கடின உழைப்பாளி,' 'அறிவாளி,' 'மற்ற எவரையும்விட அதிகக் காலமாக சர்க்கார் அலுவலகங்களில் இடம் பெற்றிருப்பவன்' என்பன போன்ற பொருள்கள் 'மதராசி' என்ற சொல் நல்ல செயல்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் போதும், 'ஆந்திரம், தமிழ் நாடு, திரு-கொச்சி, தென்கன்னடம் முதலிய பகுதிகளிலிருந்து பெரும் அளவில் மக்களை இங்கு இழுத்து வருகிறவன்' என்று, தீயனவற்றைக் குறிப்பிடும்போதும் உபயோகிக்கப்படுகிறதாகவும், மத்திய தொழில்துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி வேடிக்கையாகக் கூறினாராம்.

"இங்குள்ள மக்கள் தான் 'தட்சிணப் பிரதேசம்' பற்றிப் பேசுகிறார்கள்; ஆனால் டில்லியிலும், மற்றும் வடநாட்டிலும் உள்ள மக்கள் 'மதராஸ் பிரதேசம்' என்றே தான் அழைக்கிறார்கள் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் உறவு முறையினர் என்றே அவர்கள் கருதுகிறார்கள்"

என்றும், அவர் தகவலளித்தாராம்.

டில்லி சர்க்கார் அலுவலகத்தில் பல 'மதராசி'கள் முக்கியமான அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்களாம்.

'மதராசி' எனப்படுபவன் பிறரால் விரும்பப்படுபவன்—மதிக்கத்தக்கவன்; அதே நேரத்தில் வெறுக்கப்படத்தக்கவன்—பயப்படத்தக்கவன் என்றும் வடவர் கருதுவதாயும் கூறியிருக்கிறார். இதையெல்லாம் பார்க்கும்போது, வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் கொண்டிருக்கிறது என்று தென்னாட்டு மக்கள் கூறுவது கேட்டுத் தமக்குச் சிரிப்பு வருவதாகவும் சிரித்துக் கொண்டே பகன்றாராம். உண்மை என்னவெனில், சர்க்கார் அலுவலகங்களில் நாம்தான் ஆதிக்கம் செலுத்துகிறோம். அது, பணம் திரட்டுவதற்காக என்றில்லாமல், தங்கள் கையில் அதிகாரம் தங்குவதற்குத்தான். ஏனென்றால், அங்குள்ள சாதாரண ஒரு குமாஸ்தாவாகவேனும் 'மதராசி' ஒருவன் இருந்தால் அலுவலகத்தில் நடைபெற்று வருகிற வேலைகளை அவனால் நிலை நிறுத்திவிட முடியும். இவற்றையெல்லாம்விட தென்னாட்டில் வசித்து வருகிற பல வடநாட்டவர்கள் தென்னாட்டிலுள்ள மக்களுடன் ஒன்றிப் போயிருப்பது, குறித்து எனக்கு மகிழ்ச்சியே என்றும் அந்த அந்தணோத்தமர் கூறியிருக்கிறார்.

சென்னை-குறிப்பாகச் சென்னை நகரத்தின் ஒரு முக்கியப் பெருந்தன்மை, அதனுடைய 'கலப்புத் தன்மை'யாம்! அண்மைக் காலம் வரையில் தமிழ் நாட்டில் எவருமே தங்கள் நாட்டைவிட்டு ஆந்திரர் வெளியேற வேண்டுமென்று கோரினதில்லை; ஆனாலும் ஆந்திரர்கள்தான் பிரிந்து சென்றார்கள்; இப்போதும் தமிழ் நாட்டில் இருக்கும் மலையாளிகளும், கன்னடியரும் பிரிந்து விடுவார்கள் என்பது குறித்தும் தாம் கவலையடைகிறாராம்.

'இந்தியா' என்ற பெயரை 'பாரதம்' என்று மாற்றத் தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லையாம், 'மதராஸ்' என்ற பெயரையும் மாற்றுவதற்கு சென்னை முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்தது குறித்தும் தாம் மகிழ்ச்சி அடைகிறாராம்.

இவரும் தன்னை இந்த நாட்டு மக்களின் பிரதிநிதி என்றுதான் கூறிக்கொள்கிறார். அதுபோலவே, மதராஸை 'தமிழ் நாடு' என்று அழைக்கவேண்டும் என்று வேண்டுவோர் 'தமிழ் நாடு எனப்படும் மதராஸ்' என்றே அழைக்கட்டும் என்றும் அவர் யோசனை கூறினாராம், தனது முதல் மந்திரி பதவிக்கு வந்தபின் பல மடங்கு பெரிதாகியிருக்கிறது என்று முன்பு கூறியதற்கு சான்று பகருவதுபோல.

## பழிவாங்கும் நடவடிக்கை?

போலந்து சர்க்காரின் என்ஜினீரிங் இலாகாவும், மோட்டார் உற்பத்தி இலாக்காவும் தனித்தனியாக இல்லாமல், மின்சார உற்பத்தி இலாகா அமைச்சர் ஜாசுக் என்பாரின் தலைமையின் ஒன்றாக இணைக்கப்பட்டு விடுவதென முடிவு செய்திருப்பதை யொட்டி, கலைக்கப்படும் இலாகாக்களின் அமைச்சர்களாக இருந்த இருவரும் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கலைப்பும் — இணைப்பும் சமீபத்தில் நடந்த போஸ்னான் கலவரங்களுடன் எந்தவகையிலும் சம்பந்தப்பட்டவையல்ல வென்றும், சில வாரங்களுக்கு முன்னால் போலந்து பிரதமர் வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் நிர்வாக வசதிக்காக மேற்கொள்ளும் நடவடிக்கையே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திர நாடாக உருவாகிவரும் தங்க நியாகா

## இராதாகிருஷ்ணன் ஆசி

தாரேசலாம், ஜூலை 9—

தங்க நியாகா நாட்டை ஒரு சுதந்திர நாடாக உருவாக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி வெற்றியடையும் என்று தாம் நம்புவதாகவும், ஐ. நா.-வுடனும், காமன்வெல்த்துடனும் தங்க நியாகா தொடர்பு கொண்டிருப்பது, அதனுடைய அதிர்ஷ்டமே என்றும் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தங்க நியாகா மக்கள் தங்கள் நாட்டைச் சுதந்திர நாடாக்க மேற்கொண்டுவரும் வேலைகளில் அங்கு வாழும் இந்தியரும் பங்கேற்று ஒத்துழைப்பது குறித்துத் தம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்த அவர், தங்க நியாகா அந்நாட்டு மக்களுடைய நாடெனினும், அந்நாட்டு மக்களுடன் இந்தியரும் ஒத்து வாழவேண்டும் என்றும், அங்கு அவர்கள், தங்களுக்கென புது உரிமைகள் எதையும் கோரக்கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

தங்க நியாகா விரைவிலேயே சுதந்திரம் அடைய வாழ்த்துக் கூறி, அண்மைக் காலத்தின் மனித சமுதாயத்தின் மனப்பான்மையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்றும், கொடிய அணுகுண்டுகள் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் இக்காலத்தில் ஒரு சாரார் மற்றொரு சாராரை அடக்கி ஆள்வதென்பது இயலாத காரியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இறுதியில அவர், மனித உறவில, தங்க நியாகாவில் ஒரு புதிய பரிசோதனை நடைபெறுகிறது என்றும், இப்பரிசோதனை, கீழ் நாடு—மேல் நாடுகளில் சுமுக உறவுக்கு நடைபெறும் அறிகுறியாக விளங்கக் கூடியதென்றும் குறிப்பிட்டார்.

# இரயில்வே இலாகா குமாஸ்தாக்கள் ஆர்ப்பாட்டம்

## வீட்டு வசதி கோருவதை அலட்சியப்படுத்தும் சர்க்காருக்கு எதிராக நடவடிக்கை

### போத்தனூரில் 250 ஊழியர் கலந்துகொண்டனர்

கோவை, ஜூலை 8—

இரயில்வே இலாகாவில் குமாஸ்தாக்களாகப் பணிபுரியும் சுமார் 250 பேர், தங்களுடைய கோரிக்கை குறித்து, சர்க்கார் அசட்டையாயிருப்பதை எதிர்த்து பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

குடியிருக்க, ஷோரனூர் அல்லது ஒலவக்கோடு நகரத்தில், வசதி செய்து தரப்படவேண்டும் என்ற கோரிக்கையைத்தான் இரயில்வே குமாஸ்தாக்கள், சர்க்கார் அலட்சியம் செய்வதாகக் கூறுகின்றனர். 'பாதிக்கப்பட்டுள்ள குமாஸ்தாக்களுக்கு புதிய தலைமை அலுவலகம் அமையும் இடத்தில் வீடு வசதி செய்து தருவதாக நிர்வாகத்தினர் உறுதி கூறியிருந்தனர்' என்று ஊழியர் சங்கத் தலைவர் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார். 'ஏற்கனவே நீண்ட காலமாக பல நிர்வாக அலுவலகங்கள் இருந்து வரும் போத்தனூரிலேயே, இந்த புதிய தலைமை நிலையமும் முன்பு திட்டமிடப்பட்டிருந்ததைப்போல, நிறுவப்பட்டிருந்தால் பிரச்சினை இப்போது இத்தனை பெரியதாக உருவெடுத்திருக்காது. ஆனால், ஒலவகோட்டிலோ, ஷோரனூரிலோ, எல்லோருக்கும் வீட்டு வசதி செய்து தருவது இயலாததாகியிருக்கிறது, இப்போது' என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இரயில்வே மந்திரி தலையிட்டு போத்தனூர் ஊழியர்களுக்கு நியாயம் வழங்கக் கோரியும், இங்குள்ள ஊழியர்களை 'பிராட்கேஜ்' பகுதிகளுக்கு அப்பால் மாற்றாமலிருக்க வேண்டும் என்றும், திட்டமிடப்பட்டுள்ள பிராந்திய தலைமை அலுவலகத்தை போத்தனூரிலேயே நிறுவக்கேட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# செய்யட்டும், பாவம்!

லண்டன், ஜூலை 9—

சைப்ரஸ் போராட்டத்தினை அடக்குவதற்காக அடுத்தபடியாக எந்த முறையை மேற்கொள்ளுவதென்பது குறித்து ஆலோசனை செய்வதற்கான அவசரக் கூட்டம் ஒன்றை, பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் கூட்டியிருக்கிறார். தன்னுடைய சர்க்காரின் இலாகாப் பொறுப்பு அமைச்சர்கள் அனைவரையும் ஆலோசனைக்கு அழைத்திருக்கிறார்.

தொழில்துறை அபிவிருத்தியைப் பரவலான அடிப்படையில் வளர்க்கும் நோக்கத்துடன், பல்வேறு மாநிலங்களில் இதுவரையில் 13 தொழில் பேட்டைகளை ஏற்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

# திருச்சி மாநாடு செய்த திருப்பம்

## ரஷ்ய கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பு

லண்டன், ஜூலை 8—

ரஷ்யாவில் கம்யூனிஸ்டு அல்லாத கட்சிக்கு ஒருபொழுதும் அனுமதி கிடைக்காது என ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகை 'பிராவ்டா' தெரிவித்திருக்கிறதாம்.

"அயல் நாட்டு அக்கறைகளால்" உருவாகும் இத்தகைய கட்சியைப் பற்றிய எண்ணம் "செயற்கை சிருஷ்டியாகும்" என அப்பத்திரிகை குற்றஞ் சாட்டிற்று

சோஷலிசத்துடன் 'முன்னணி' என சில நாடுகளில் ரஷ்யா சமீபத்தில் கூறியுள்ளது எப்பொழுதும் கம்யூனிஸ்டு ஆதிக்கம் நிறைந்ததாகவே இருக்குமென்றும், "குறிப்பிட்ட சரித்திர சூழ்நிலையில் மற்ற நாடுகளில்" அரசாங்கத்தில் பங்கு எடுத்துக்கொள்ளும் மற்ற தொழிலாளிகள் கட்சிகள் இருக்கலாமென்றும், ஆனுல் "மார்க்சிஸ்டு புரட்சிக் கட்சிதான் அரசாங்கத்தில் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ளுமென்பதற்கு உறுதி கூறப்பட வேண்டும்" என்றும் 'பிராவ்டா' கூறியுள்ளதாம்.

## அமெரிக்காவிலிருந்து கோதுமை!

எஸ். எஸ். "அரிஸ்டிடிஸ்" என்னும் கப்பல் அமெரிக்காவிலிருந்து கோதுமையை ஏற்றிக் கொண்டு 1956 ஜூலை 8 விசாகப் பட்டணம் துறைமுகத்தில் வந்து 2 000 டன் கோதுமையை அங்கே இறக்கியது.

# திமிரின் உச்சாணிக் கொம்பிலிருந்த ஆச்சாரியார் இன்று 'தி. மு. க.' என தெளிவாகப் பேசுகிருர்!

## அழியப் போகிற இயக்கம் என்று கருதியோர் அதுபற்றி அலறித் துடிப்பதேன்?

## ஆழ்வார்பேட்டை கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

"திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாடு திருச்சியில் நடைபெறுவதற்கு முன்பு, கழகத் தோழர்கள், கூட்டங்களில் பேசும்போதும், மாநாடு பற்றி பத்திரிகைகளில் எழுதும்போதும், மாநாடு, தமிழ்நாட்டு அரசியலில் மகத்தானதோர் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று சொல்லி வந்தோம். அப்போதெல்லாம், நமது எதிரிகள் நம்மைப் பார்த்துக் கேலி பேசினுர்கள்; 'என்ன பெரிய திருப்பம் ஏற்பட்டுவிடப் போகிறது?' என்று கிண்டல்மொழி வீசினுர்கள்.

"ஆனுல், இன்று, நமது திருச்சி மாநாடு, தமிழ்நாட்டு அரசியலில் எத்தகையதோர் திருப்பத்தை உண்டு பண்ணி யிருக்கிறது என்பதற்கு நாம் ஆதாரம் தேடிக் காட்ட வேண்டிய நிலையில் நமது எதிரிகள் நடந்து கொள்ளவில்லை.

"இன்று தமிழ்நாட்டு அரசியல் வட்டாரத்தில் தோன்றி நிலவிக் கொண்டிருக்கும் பெரியதொரு பரபரப்பே அதற்குச் சான்ருக முடியும்.

திருச்சி மாநாட்டின் முடிவுகள் நமது விரோதிகளின் உடலிலும் உள்ளத்திலும் அனுவசியமானதோர் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கின்றன. நமது முடிவுகள், ஏதோ அவர்களைச் செய்திருக்கின்றன என்பதை அவர்கள் தங்கள் வாய்மொழி மூலம் காட்டிக் கொண்டு வருகிருர்கள்.

"காமராசர், இன்று போகிற இடங்களில் எல்லாம், நம்மைப்பற்றித்தான் பேசுகிருர் மிகுந்த சிரமத்தோடு.

"காமராசர் மட்டுமல்ல—ஆச்சாரியார்கூடப் பேசியிருக்கிருர்—பேசுகிருர்.

"திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மூன்று சொற்களை, இவர்கள் எல்லாம், திருச்சி மாநாட்டிற்கு முன்பு சொல்லவே—உச்சரிக்கவே கூசினுர்கள்.

"சாகப் போகிற இந்தக் கழகத்தை, நாம் வேறு நம் வாயால் பெயர் சொல்லி அழைத்து வளர்விடுவானேன் என்று திமிரின் உச்சாணிக் கொம்பில் இருந்துகொண்டு தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

"ஆச்சாரியார், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முதன்மந்திரியாக இருந்தக் காலத்தில், நம்மைப்பற்றிப் பேச வேண்டும் என்று நினைக்கிற நேரத்தில் எல்லாம், 'தி. மு. க.' என்று சுருக்கமாகக் கூறுவதை விடுத்து, 'இந்த நாட்டில் உள்ள வகுப்புவாதிகள்—சமுதாய விரோதச் சக்திகள்' என்று தான் இல்லாததை இருப்பதாகச் சுற்றி வளைத்துக் கூறிக் கொண்டிருந்தார்.

"ஆனுல், அதே ஆச்சாரியார் இன்று மதுரையில் கூட்டம் ஒன்றில் பேசும்போது, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று நிதானமாக—தெளிவாக உச்சரித்திருக்கிருர். எப்போது? திருச்சியில் நமது மாநாடு இனிதே முடிந்த பிறகு!

"தி. மு. கழகத்தவர்கள் திருச்சியில் அழகானதோர் மாநாடு கூட்டினுர்கள்; அங்கே தீர்க்கமாகச் சிந்தித்துத் தீர்மானங்கள் பல நிறைவேற்றி யிருக்கிருர்கள். அதில் ஒன்று எனது கவனத்தைக் கவர்ந்தது' என்று பேசி யிருக்கிருர். தி. மு. கழகத்தைப் பற்றியும், அதன் மாநாட்டைப் பற்றியும், மாநாட்டின் முடிவுகளைப் பற்றியும் ஆச்சாரியார் என்ன பேசினுர் என்பதல்ல நான் இங்கே கூறவிரும்பும் விஷயம். அவர், 'தி. மு. க.' என்ற சொற்களை உச்சரித்தார் என்பதுதான் நான் எடுத்துக்காட்ட விரும்புவது.

"எவர், இந்த சொற்களைத் தன் வாயிலிருந்து கூறிவிட்டால் நாக்கு வெந்துபோய்விடும் என்று கருதிக் கொண்டிருந்தாரோ, அவர் இன்று, 'தி. மு. க.-வினர் தீர்க்கமாகச் சிந்தித்துத் தீர்மானங்கள் போட்டிருக்கின்றனர்' என்று பேசியிருக்கிருர்.

"இது, தி. மு. கழக மாநாடு ஆச்சாரியார் போன்ருரின் உள்ளத்தில் ஏற்படுத்திபிருக்கிற திருப்பமல்லவா? இது, தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள திருப்பமல்லவா?

"முதலமைச்சர் காமராசர், நமது மாநாடு நடைபெற்று முடிவுற்ற இரண்டே நாளில், திருச்சிக்கு ஓடோடியும் போயிருக்கிருர். காரணம் என்னவாயிருக்கும் என்று யோசித்தேன். 'திருச்சியில் தி. மு. கழக—மாநாடு—முதல் நாள் இன்று—இரண்டு இலட்சம் பேர் கலந்து கொண்டனர்; இரண்டாம் நாள்—பந்தலே கொள்ளவில்லை—நகரம் முழுவதும் கழகத் தோழர்கள் நிரம்பிவிட்டனர்'—என்று தினம் தினம் அவரது சகாக்கள், அவருக்குச் செய்தியனுப்பிக் கொண்டிருந்த போது, மாநாட்டைப் போய்ப் பார்த்துவரும் நிலையில் நாம் இன்று இல்லையே என்று காமராசர் துடித்திருக்கவேண்டும்.

"பின்னர், 'மாநாட்டைத்தான் பார்க்க முடியாது போயிற்று; மாநாட்டுப் பந்தலையாவது பார்த்து, அதனைக் கொண்டு, மாநாட்டிற்கு எத்தனை இலட்சம் பேர் வந்திருக்கக் கூடும் என்று கணக்கிட்டுக் கொள்ளலாம்' என்று கருதி, எங்கே பந்தலைப் பிரித்துவிடுகிருர்களோ என்று பயந்து, மாநாடு முடிந்த மறுநாளுக்கு மறுநாளே, திருச்சி ஓடியிருக்கவேண்டும் என்றே நான் கருதுகிறேன்.

"திருச்சியில் பேசும்போது காமராசர், பெண்களே, தி. மு. கழகத்தைத் தோற்கடித்துவிடுவர் என்று குறிப்பிட்டாராம். இந்த முடிவுக்கு அவர் எப்படி வந்தாரோ தெரியவில்லை.

"மாநாட்டைப் பற்றி அங்கு வந்திருந்தவர்களை இவர் கேட்டிருக்கக்கூடும்—'மாநாட்டில் ஆண்கள் அதிகமா?, பெண்கள் அதிகமா?' என்று. அவர்களும் நிச்சயமாக, ஆண்கள் தான் அதிகம்; பெண்கள் ஐயாயிரம் அல்லது ஆறுயிரம் பேர் தான் இருப்பர் என்று பதில் தந்திருக்கக்கூடும். அதை வைத்துக்கொண்டு உடனே காமராசர், 'ஓகோ, தி. மு. கழகத்திற்கு ஆண்கள்தான் ஆதரவு தருகின்றனர் போலும். பெண்கள் ஆதரவு இல்லை போலும்' என்று கணக்குப் போட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். ஏனெனில், அவர், இரண்டும் இரண்டும் நாலு; நாலில் இரண்டு போனுல் இரண்டு என்று ஒற்றைப் படையில் மட்டுமே கணக்குப்போடத் தெரிந்தவரே தவிர, பிரமாதமான அரசியலைக் கற்றறிந்தவரல்ல.

"திருச்சி மாநாடு வரையில், காமராசர் தி. மு. கழகத்தைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம் வேறு. அவருக்குத் தெரியாது—தி. மு. கழகம் நாட்டு மக்களிடத்தில் எப்படிப்பட்டதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது.

"அப்போதெல்லாம் அவர் கருதியிருக்கலாம்—'இவர்கள் பேசலாம், எழுதலாம்; மக்கள் ஆதரவு இவர்களுக்கு ஏது?' என்று. ஆனுல், மாநில மாநாடு குரு—னுக்கும் தெரியும் வண்ணம், மக்கள் ஆதரவு தி. மு. கழகத்திற்கு எவ்வளவு உண்டு—தி. மு. கழகம்—மக்களிடத்தில் எப்படிப்பட்ட இடத்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'மேலைக்கே கலியாணம் கழுத்தே சும்மாயிரு!'

## சர்க்கார் ஊழியர்களுக்கு கிருஷ்ணமாச்சாரியின் பொறுமை உபதேசம்

திருச்சி, ஜூலை 9—

'பொறுத்ததுபோதும் இனியும் பொறுக்க முடியாது', என்று போர்க்கோலம்பூண்ட சர்க்கார் ஊழியர்களுக்கு மீண்டும் பொறுமை உபதேசம் செய்திருக்கிருர், மந்திரி கிருஷ்ணமாச்சாரி

எனது தலைவரைப்போல, இந்த நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பிலிருப்பவர்கள் உங்களுடைய கோரிக்கைகளின் நியாயத்தை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். எனவே சற்று பொறுமையோடு இருங்கள். நிச்சயம் உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று திருச்சி என். ஜி. ஓ-க்கள் தனக்குத் தந்த வரவேற்பின் போது அந்த அமைச்சர், புளித்துப் போய்விட்ட அந்தப் பழைய உபதேசத்தையே தந்தாராம்.

சர்க்கார் ஊழியர்கள் திருப்தியற்ற நிலையிலேயே வாழ வேண்டும் என்பதல்ல எங்கள் விருப்பம் இந்த நிலை நீடிப்பதை நாங்கள் விரும்பவும் இல்லை. எனவே பணம் கிடைத்ததும் உங்களுக்கு, நாங்கள் பணமாகவோ, வேறு வகை உதவியாகவோ நிச்சயம் நிவாரணமளிப்போம் என்று, 'மேலைக்கே கலியாணம் கழுத்தே சும்மாயிரு' என்ற பழமொழிக்கு வியாக்கியானம் செய்திருக்கிருர் அந்த மந்திரி.

1954-55-ல் இந்தியாவில் பருத்தி சாகுபடி விஸ்தீரணம் 183 லட்சம் ஏகராவாக அதிகரித்தது; அதற்கு முந்திய ஆண்டில் இந்த அளவு 172 லட்சம் ஏகராவாக இருந்தது.

இந்தியாவில் பொருட்காட்சிச் சாலைகளின் சீரமைப்புக்காகவும் அபிவிருத்திக்காகவும் அடுத்த 5 வருடங்களுக்கு மொத்தம் சுமார் 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## காமராசர் காட்டும் கருணை

மதுரை, ஜூலை 7—

மதுரை, இராமநாதபுரம் மாவட்ட சர்க்கார் ஊழியர் சங்கத்தின் தூதுக் குழு ஒன்று, முதன் மந்திரி காமராசரைச் சந்தித்து, குறைகளை எடுத்துச் சொல்லி, கோரிக்கைகளை விளக்கி உடனடியான உருவான நிவாரணம் தருமாறு கோரியிருக்கிறது.

கேட்டுக்கொண்டிருந்த காமராசர் எனது பழைய பழக்கம் இன்னும் மாறவில்லை என்பதை உறுதி செய்வதுபோல, 'அதற்கென்ன ஆகட்டும் பார்க்கலாம். அவசரப் படாதீர்கள். கைமேல் பலனளிக்க இப்போது எப்படி முடியும் கவனிக்கிறேன்' என்றே பதில் கூறினுராம்.

இந்த 'குளிர்ந்த' பதிலைக் கேட்டு மத்திய மந்திரி கிருஷ்ணமாச்சாரியையும் சந்தித்து, குறைகளை முறையிட்டு, அதிகப்படியான கிராக்கிப்படி கிடைப்பதற்கு டில்லி சர்க்கார் சென்னை சர்க்காருக்கு மானியம் வழங்குமாறு செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனராம்.

போதாதென்று, இந்த இருவரையும் சந்திக்கும் முன்பாகவே நிதியமைச்சராம் சுபபிரமணியத்தையும் பேட்டி கண்டனராம் இவர்கள்.

## செவ்வாய் சிரிக்கிறது!

செவ்வாய் கிரகத்தில்காணப்படும் கரும் புள்ளிகள் கடல்களாகவே இருக்க வேண்டும் என்று வான நூல் அறிஞர்கள் இதுவரையில் 'சாதித்து' வந்திருக்கின்றனர். ஆனுல், அவைகள் கடல்களைக் காட்டும் அடையாளங்களல்ல; காய்கறிகள் குலுங்கும் பசுமை நிலம் என்று சோவியத் வான நூலறிஞர் திக்கோ என்பார் தெரிவிக்கிருர்.

செவ்வாய் மண்டலத்திலுள்ள தட்ப வெட்ப நிலைமைகளை அநுசரித்துப் பார்த்தால், நமது உலகத்தில் கிடைக்கும் காய்கறி வகைகளில் அங்கிருப்பவை மாறுப்பட்டிருக்கும் என்று அவர் சொல்லுகிருர். அடிக்கடி மாறும் பருவங்களுக்கு ஏற்ப, அந்தக் 'கரும்புள்ளிகள்,' பச்சை நீலம், பழுப்பு மஞ்சள் நிறங்களில் திரிந்து காணப்படுவதாகவும் அவர் நிர்த்தாரணம் செய்கிருர்.

# படை குறைப்பு மட்டுமே பயத்தை ஒழிக்காது

## புல்கானினுக்கு ஈடன் கடிதம்

"தனித்தனி நாடுகளின் படைக் குறைப்பு நடவடிக்கை, உலக நாடுகளிடையே பரஸ்பர நம்பிக்கையையும் பாதுகாப்பையும் பலப்படுத்த ஓரளவு உதவக்கூடும் என்பதைத் தவிர, முழுப்பயனையும் கொடுத்துவிடக் கூடியதல்ல" என்று இங்கிலாந்துப் பிரதமர், சோவியத் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிருர். தனது நாட்டுப்படை பலத்தில் பனிரெண்டு இலட்சம் ராணுவ வீரர்களைக் குறைத்துவிட உத்தேசித்திருப்பதையொட்டி இங்கிலாந்தும் அதேபோல் குறைக்கும் முயற்சியில் ஈடுபட முன்வர வேண்டும் என்ற சோவியத் பிரதமர் கடந்த மாதத்தில் எழுதியிருக்கும் கடிதத்திற்குப் பதில் எழுதுகையில்தான் ஈடன் இப்படிக் குறிப்பிட்டிருக்கிருர்.

அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் சேர்ந்திருக்கும் 14 நாடுகளின் கருத்தையும் கேட்டறிந்தே ஈடன் தனது பதிலை அனுப்பியிருக்கிருராம்.

# இந்தியாவின் ஒற்றுமைக்காக இந்தி பரவ வேண்டுமாம்

## இந்திதான் தேசீய மொழிக்குரிய தகுதியுடையதாம்

## இதில் தகராறுக்கு இடம் கிடையாதாம்

*கேஸ்கரின் ஏகாதிபத்திய வெறிக் கூச்சல்*

பம்பாய், ஜூலை 10—

"வாழ்நாள் முழுதும் ஆங்கிலத்தையே உபயோகித்துக் கொண்டிருந்தவர்கள், திடீரென இந்திக்கு மாறுவதென்பதில் உள்ளக் கஷ்டங்களை உணர்கிறேன்.

"ஆனால், இந்தியாவின் ஒற்றுமைக்காக—தேசீயப் பாதுகாப்பிற்காக இந்திக்கு மாறித்தானாக வேண்டும்.

"வங்கம், குஜராத்தி, மராத்தி முதலிய பல இந்திய மொழிகளுடன் ஒருமைப்பாடு கொண்டதாக இருக்கிறது—இந்திய மொழிகளுள்ளேயே கற்றுக்கொள்வதற்குச் சுலபமானது என்பதால், இந்தி தேசீய மொழியாவதற்குத் தகுதி படைத்தது என்பதில் தகராறுக்கு இடமிருக்க முடியாது.

"வங்கம், தமிழ் போன்ற மொழிகள் தொன்மை மிகு—வளமுள்ள இலக்கியங்களைப் படைத்தவை என்பது உண்மையாயிருக்கலாம்; ஆனால், இந்த விவாதங்கள் எல்லாம் பலவீனமானவையாகும். இவை, இந்தியா முழுவதும் இந்தி பரவுவதையோ, அதன் மூலம் இந்தியா மேலும் பலம்பெறுவதையோ தடுக்கக்கூடாது,"

என்று, ஏகாதிபத்திய வெறி கொண்டு, திமிரோடு பேசியிருக்கிறார், டாக்டர் கேஸ்கர் எனும் மத்திய மந்திரி!

'இந்தியை தேசீய மொழியாக்குவதில், சில நடைமுறைக் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை எல்லாம், பொறுமையுடன் இருப்பதின் மூலமும், விவேகமுடன் நடந்து கொள்ளுவதின் மூலமும்தான் போக்க முடியும் என்றும் அவர் கூறினாராம்.

# ஆசிரியர்களுக்கு பென்ஷன் திட்டம்

## இந்த ஆண்டு முதல் அமுலாகும்

*சென்னை சர்க்கார் அறிவிப்பு*

சென்னை, ஜூலை 10—

ஆரம்பப் பள்ளி, மற்றும் செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கும் பென்ஷன் திட்டம் ஒன்றை அமுல் செய்ய சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது.

சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் பணி புரிவோருக்கும் பயன் தரும் இத்திட்டம், கடந்த ஏப்ரல் திங்கள் முதல் தேதி முதல் அமுலுக்கு வரும் என்றும் தெரியவருகிறது.

இதுபற்றிய விதிகள் இன்னும் ஒரு வாரத்திற்குள் வெளியிடப்படும் என்று நிதிமந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

இந்த பென்ஷன் திட்ட விவரங்களை, ஆசிரியர் தூதுக் குழு ஒன்று தன்னைச் சந்தித்தபோது நிதியமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டம், மலபார் மற்றும் தென்கன்னட மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் அமுலாகும் என்றும், உடற்பயிற்சி ஆசிரியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், எல். டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்துப் பின்னர் யோசிக்கப்படும் என்றும் நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

# ஓசியார்பூர் சம்பவங்கள்

## கட்சி விசாரணைக்கு ஆசாத் ஒப்பம்

*நீதி மன்ற விசாரணை கோரி 14 நாட்களாக ஒருவர் உண்ணாவிரதம்*

இந்து மகாசபை, மற்றும் மகா பஞ்சாப் சமிதி ஆகியவற்றின் பிரதிநிதிகள், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், கல்வி மந்திரி அபுல் கலாம் ஆசாத் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து பஞ்சாப் நிலைகள் குறித்தும், ஓசியாபூரில் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக நடைபெறும் அர்த்தால் குறித்தும் விவாதித்தனர் என்று தெரியவருகிறது.

தூதுக் குழுவினர் மந்திரிகளிடை பேசும்போது, ஓசியார்பூர் சம்பவங்கள் குறித்து ஒரு அதிகார பூர்வமான நீதி மன்ற விசாரணை வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் தெரிய வருகிறது.

ஜனசங்கத் தலைவர் ஒருவர், கடந்த 14 நாட்களாக, விசாரணை கோரி உண்ணாவிரதம் இருந்து வருவதாகத் தெரிய வருகிறது. இவர் விருப்பம் தெரிவித்தாலன்றி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையைக் கைவிடுவதற்கு இல்லை என்றும் தூதுக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனராம்.

இந்தத் தூதுக் குழுவைச் சந்தித்தபின் மௌலானா ஆசாத் வெளியிட்டுள்ள அறிக்கையின் சாரமாவது:—

"விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற காங்கிரஸ் கட்சி விசாரணைக் குழுவிற்கு எதிராக இப்போது எவரும் ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார்கள் என்று தெரியவருவதால், குழு, நாளை முதல் விசாரணையைத் தொடங்கலாம் என்று அறிவித்துள்ளேன். இப்போது குழு விசாரணை நடத்துவதில் கஷ்டமேதும் இருக்காது என்று கருதுகிறேன். ஓசியாபூரில் குழு வேலை செய்வதற்குத் தேவையான அமைதியான சூழ்நிலை உருவாகும் என்று நம்புகிறேன்."

1957 மே மாதம் 5-ந் தேதி வாக்கில் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனும், அயல்நாட்டு அமைச்சர் செல்வின் லாயிடும் ரஷ்யாவுக்குச் சென்று 10 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளக் கூடுமாம்.

## ப. உ. சண்முகம்

சுற்றுப்பயணம்

ஜூலை 12, 13, 15 : திருவண்ணாமலை
17 : வேட்டவலம்
23 : மருத்துவாம்பாடி
29 : மங்கலம்
ஆக. 5 : ஆற்காடு

# ஸ்டாலின் மீது 'தாக்குதல்'

பிராங்கோ கருத்தறிவிக்கிறார்

வின்செஸ்டர், ஜூலை 10—

"இப்போதைய ரஷ்யத் தலைவர்கள் ஸ்டாலின் மீது நடத்தி வருகிற தாக்குதல்கள், எந்தவித இலட்சிய மாற்றத்தையும் குறிப்பிடுவனவல்ல; ஒரே இலட்சியத்தை அடைவதற்குப் போர்த்தந்திர முறை மட்டும் மாறியிருக்கிறது என்பதைத்தான் அவை காட்டுகின்றன.

"ரஷ்யாவிற்குள் நிலவும் சிக்கலான — குழப்பமான — கடினமான சூழ்நிலைகளின் விளைவாகத்தான், ஸ்டாலினுக்கு எதிராக குருஷ்சேவின் குற்றச்சாட்டுக்கள் அமைந்திருக்கின்றன,"

என்று ஸ்பெயின் நாட்டுச் சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோ குறிப்பிட்டிருக்கிறார்.

'ரஷ்யாவின் புதிய கொள்கை, நீண்ட எதிர்காலத்தில், பெரும் ஆபத்தை உள்ளடக்கியதாகும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## பம்பாய் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம்

15—7—56 காலை 10-30 மணியளவில், தாராவி 'திராவிடரக'த்தில், மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது அலுவலக நன்கொடை வசூல், புத்தாண்டு நிர்வாகிகள் தேர்தல், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

# திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் வள்ளுவராண்டு 1987, ஆனித் திங்கள், 31-ம் நாள் (14—7—56) சனிக்கிழமை, சென்னை அரண்மனைக்காரத்தெரு, கோகலே மண்டபத்தில், மாலை 5-மணியளவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்குத், தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

ஏ. கே. வில்வம்
துணையாசிரியர், 'முரசொலி',
சென்னை—6

அருண்மொழி B. O. L.
பி. பி தெரு,
சென்னை—6

# பணமலை சரிகிறது!

பிட்ஸ்பர்க், ஜூலை 9—

6,50,000 எஃகுத் தொழிற்சாலை ஊழியர்களும், அந்தத் தோழர்களைச் சார்ந்து நிற்கும் 50,000 பல்வேறு தொழிலக ஊழியர்களும் செய்துவரும் வேலை நிறுத்தம் கடந்த ஞாயிறுடன் இரண்டு வாரமாகிறது.

இந்த இரண்டு வாரவேலை நிறுத்தத்தின் காரணமாக அமெரிக்க நாட்டின் பொருளாதார பலத்தில் இருபத்தைந்து கோடி டாலர் இழப்பேற்பட்டிருப்பதாக எஃகுத் தொழில் சம்பந்தப்பட்ட இதழொன்று தெரிவிக்கிறது.

பேரிழப்பைப் பரிசாகக் கொடுத்துவரும் இந்த வேலை நிறுத்தம், விரைவில் முடிவடையும் என்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லையாம்.

# முமமுனைப் போராட்ட நினைவு நாள்

**மதுரை :**

15-7-56 மாலை 5 மணியளவில், மதுரைநாடார் வித்தியாசாலைத்தெரு, தாளமுத்து—நடராசன் படிப்பகத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, திலகர் சதுக்கத்தில் வந்து முடிவடையும். அங்கு, மாலை 6-மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி—கல்யாணசுந்தரம், எஸ். முத்து, கே. சந்தானம், வசனப்பித்தன் ஆகியோர் பேசுவர்.

★

**கல்லக்குடி :**

16-7-56-ல் கல்லக்குடி தி. மு. கழகச் சார்பில், தோழர் அ. தம்புசாமி தலைமையில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'ஜூலை 15'—என்பது பற்றிப் பேசுவார்.

## திருமணங்கள்

13—7—56 காலை 8 மணியளவில், சென்னை—சேத்துப்பட்டு, மீனும்பாள் — சிவராஜ் நகரில், தோழியர் ஆர் இராசாம்பாள்—தோழர் பி முனுசாமி திருமணம், தோழர் வி முனுசாமி எம். சி. தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. எம் கண்ணபிரான் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—7—56 காலை 9 மணியளவில், திருவள்ளூர் கிராமணியார் சத்திரத்தில், தோழர் தசரதன்—தோழியர் கோகிலா சீர்திருத்தத் திருமணம், தோழர் டி. ஆர். வரதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி பி சிற்றரசு, பா. சு. மணி வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—7—56 காலை 10-30 மணியளவில், திண்டுக்கல் கிராம முன்சீப் சந்து, திரு. ரெங்கசாமி நாயுடு [illegible]டத்தில், தோழர் பி. சமதர்ம[illegible] தலைமையில், தோழர் வெ. சுப்பையா—தோழியர் பொன்னம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். முத்து, என். தங்கவேலர், ஏ சுப்பையா வாழ்த்துரை வழங்குவர்.

* * *

13—7—56 முற்பகல் $3\frac{1}{2}$ மணியளவில், ஸ்ரீவைகுண்டம் கம்மாளர் தெருவிலுள்ள மணமகன் இல்லத்தில், தோழர் கைலாசம்—தோழியர் பொன்னம்மாள் திருமணம் நடைபெறும்.

* * *

13—7—56 பகல் 12-5 மணியளவில், தேவாரத்தில், தோழியர் பாலசரசுவதி — தோழர் சோமசுந்தரம் திருமணம் நடைபெறும்.

# ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிற்று.

"அதற்குப் பிறகு இன்று, நர்சுகள் சங்க ஆண்டு விழாவாயினும் சரி—ஆரம்பப் பள்ளிக்கூட அஸ்திவாரக் கல் நாட்டு விழாவாயினும் சரி—அல்லது 7 பேர்களடங்கிய கூட்டமானாலும் சரி, தி. மு. கழகத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

"இன்று தமிழ்நாட்டில் எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும், நம்மைப் பற்றிய குறிப்புகள் வந்துகொண்டிருப்பதை நாம் காண்கிறோம். 'தி. மு. கழகத்தின் இலட்சியம் இந்த வகையில் ஒட்டையானது; கொள்கைகள் பழுதானவை' என்று எவராவது—மந்திரிகளும் மற்றவர்களும் பேசிக்கொண்டிருப்பதைப் பத்திரிகைகள் வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. நாம் நமது இலட்சியத்தையும் கொள்கைகளையும் விளக்க மேற்கொள்ளுகிற நடவடிக்கைகளை அவைகள் வெளியிடுவதில்லை. நம்மைப்பற்றி எவராவது பேசினால், அதைப் பிரமாதமான தலைப்புகளின்கீழ் பிரசுரித்து வருகின்றன.

"இது, எதைக் காட்டுகிறது? தமிழ் நாட்டு அரசியலில் ஏற்பட்டுவிட்ட திருப்பத்தைக் காட்டவில்லையா?

"அழியப்போகிற இயக்கம் என்று கருதினார்கள் அலட்சியத்தினாலேயே அழித்து விடலாம் என்று கனவு கண்டார்கள். ஆனால், இன்று நிலை என்ன? இன்று, தங்களுடைய சகல பிரயத்தனங்களையும், ஆ[illegible] முழுவதையும் திரட்டி முழு மூச்சோடு எதிர்த்தாலன்றித் [illegible] மீள முடியாது என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறா[illegible] கம் அந்த அளவுக்கு நாட்டில் வளர்ந்தோங்கிவிட்டிருக்கிறது.

"நாம இந்த நிலையை அடைந்து வெகுநாளாகிறது. ஆனால் எதிரிகள் இந்த நிலையை உணரத் தொடங்கியது மே மாதம் 21-ந் தேதிக்குப் பிறகுதான்.

"மாநாட்டில் நாம 33 தீர்மானங்களை நிறைவேற்றினோம். அவற்றை எல்லாம நமமுடைய எதிரிகளில் சிலர் தங்கள் தங்கள் கண்ணோட்டத்திலிருந்து, திரித்தும்—பிரித்தும், தங்கள் விருப்பமபோல வியாக்கியானம செய்யும் வேலையைச் செம்மையாகச் செய்து வருகிறார்கள்.

"நாம நிறைவேற்றிய 33 தீர்மானங்களில் எல்லாம் மிகக் குறைந்த வாசகமுடைய—ஒரே வாக்கியத்தில் அமைந்திருப்பது, கடைசித் தீர்மானந்தான். அந்தச் சிறிய தீர்மானம் தமிழ் நாட்டில் ஒரு பெரும புயலைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அந்தத் தீர்மானததைக் கண்டு எதிரிகள் நடுங்குவதைப் பார்த்து நம்மால் சிரிக்காமலிருக்க முடியவில்லை.

"பெரியதொரு வெடி மருந்துக் கிடங்கில், சிறிய தீப்பிழம்பு விழுந்ததைப்போல, தேர்தல் தங்களின் ஏகபோக உரிமை என்று கருதிக் குதித்துக் கிடந்தோரை வெடிக்க வைத்திருக்கிறது அந்தத் தீர்மானம.

"தேர்தலில் நாம் போட்டியிடுகிறோம் என்ற தீர்மானம் கேட்டு மக்கள் மகிழ்கிறார்கள்; ஆனால் நமது எதிரிகளோ மிரளுகிறார்கள்.

"அரசியல் கட்சிகள் தேர்தலில் ஈடுபடுவது என்பது ஜனநாயக யுகத்தில் வரவேற்கப்பட வேண்டியதாகும். மக்கள் வரவேற்கத்தான் செய்கிறார்கள், நமது முடிவை; ஆனால், ஆட்சியாளர்கள்........?"

—இவ்வாறு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 9—7—56 அன்று சென்னை—ஆழ்வார்பேட்டை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.